# நான்காவது கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

முன்னிலை : திரு. G. மணிகண்டராஜா, பி.ஏ.பி.எல்.,
நான்காவது கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2023ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29ம் நாள் சனிக்கிழமை

**அசல் வழக்கு எண். 832/2022**

கனரா வங்கி, அதற்காக அதன் மேலாளர்,

துவாக்குடி கிளை, திருச்சி. ...வாதி

....எதிர்...

1. S. லாவண்யா

2. G. சக்திவேல் ....பிரதிவாதிகள்

இந்த வழக்கானது என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T. ஜெயராமன், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா கடன் தொகை ரூ.2,21,620.18/-ஐ வட்டியுடன் வாதிக்கு திருப்பி செலுத்தக் கோரி, இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. அசல் வழக்குரையின் சுருக்கம்** :

1ம் பிரதிவாதி B.Sc செவிலியர் படிப்பு படிப்பதற்காக வாதி வங்கியில் ரூ. 1,54,000/-ம் கடன் தொகை கோரியதன் பேரில் வாதி வங்கி 21.02.2014ல் மேற்கண்ட கடன் தொகையை

G MANIKANDARAJA Digitally signed by G MANIKANDARAJA Date: 2023.04.29 11:03:12 +0530

வழங்கியது. மேற்ண்ட கடன் தொகையை வருட வட்டி 11.20% வீதம் செலுத்துவதாக பிரதிவாதிகள் இருவரும் உறுதியளித்து கடன் ஒப்பந்தம் மற்றும் இதர ஆவணங்களை வாதி வங்கிக்கு ஏற்படுத்திக்கொடுத்தனர். கடன் நிலுவை தொகையை ஒப்புக்கொண்டு உயிர்ப்பு கடிதம் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு ஏற்படுத்தி கொடுத்தார்கள். 04.05.2022 ல் பிரதிவாதிகளுக்கு வாதி வங்கி கடன் தொகையை செலுத்துமாறு அறிவிப்பு அனுப்பியும் பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை மற்றும் கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை. வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் 30.04.2022 அன்று அசல் தொகை மற்றும் வட்டியுடன் சேர்த்து ரூ.2,21,620.18/- வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் திருப்பு செலுத்த வேண்டும் என்று இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் பிரதிவாதிகள் ஒரு தலைபட்சம் ஆக்கப்பட்டுள்ளார். வழக்கு விசாரணைக்கு இடப்பட்டுள்ளது. வாதி முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டார். அவர் மூலமாக வா.சாஆ. 1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. தற்பொழுது இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கியமான பிரச்சினை என்னவென்றால் வாதியின் தாவா அனுமதிக்கப்படக்கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>5. பிரச்சினைக்குரிய தீர்வு</u>** :

வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்குரை சாட்சி மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. பிரதிவாதிகள் வாதி வங்கியிடம் ரூ.1,54,000/- கடனாக பெற்றுக்கொண்டு, அதனை வட்டியுடன் திருப்பி செலுத்த உத்தரவிடக்கோரி இப்பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் பிரதிவாதிகள் ஒரு தலைபட்சமாக வைக்கப்பட்டார்கள்.

6. வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக வாதி வ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக வ.சா.ஆ.1 கடன் விண்ணப்பம், வா.சா.ஆ. 2 கடன் அனுமதிக் கடிதம், வா.சா.ஆ.3 கடன் ஒப்பந்தம், வா.சா.ஆ.4 கடன் ஒப்பந்தம், வா.சா..ஆ.5 கடன் பற்றுகை மற்றும் பிணைய கடிதம், வா.சா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்பு, வா.சா.ஆ.7 கடன் கணக்கு பதிவேடு, ஆகியவை குறியீடு

G MANIKANDARAJA
Digitally signed by G MANIKANDARAJA
Date: 2023.04.29 11:03:18 +0530

செய்யப்பட்டுள்ளது. வாதியின் ஆவணத்தை பரிசீலனை செய்யும் போது பிரதிவாதிகள் வாதியிடமிருந்து ரூ.1,54,000/- ஐ கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு கடன் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்பதும், மேற்படி கடன் தொகையை பிரதிவாதிகள் பலமுறை கேட்டும் வாதிக்கு திருப்பி கொடுக்கவில்லை என்பதும், இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

7. பிரதிவாதிகளுக்கு வாதியின் வழக்கிற்கு பதிலளிக்க வாய்பளித்தும், பிரதிவாதிகள் ஆஜராகாமல் ஒருதலைப்பட்சபடுத்தப்பட்டு உள்ளார்கள். வாதிக்கு பிரதிவாதிகள் கடன் தொகையை திரும்ப செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்று வாதியால் நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த கடப்பாடு உடையவர்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, பிரதிவாதிகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ வாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய ரூ. 2,21,620.18/-ஐ செலுத்த வேண்டும் என்றும், மேற்படி அசல் தொகை ரூ.1,54,000 /-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பாணை காலம் வரைக்கும் 9% வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும் செலுத்த வேண்டும் என்று தாவா செலவுத் தொகையுடன் வாதியின் தாவாவை அனுமதித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்பானது, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

G MANIKANDARAJA

Digitally signed by G MANIKANDARAJA
Date: 2023.04.29 11:03:24 +0530

நான்காவது கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

**வாதி தரப்பு சாட்சி** :

| | |
|---|---|
| வா.சா.1 | சதீஷ்குமார் |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** :

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 21.02.2014 | கடன் விண்ணப்பம் |
| வா.சா.ஆ.2 | 07.03.2014 | கடன் அனுமதிக் கடிதம் |
| வா.சா.ஆ.3 | 15.03.2014 | கடன் ஒப்பந்தம் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | 15.03.2014 | கடன் ஒப்பந்தம் |
| வா.சா.ஆ.5 | 19.10.2020 | கடன் ஒப்புகை மற்றும் பிணைய கடிதம் |
| வா.சா.ஆ.6 | 04.05.2022 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.7 | 03.05.2022 | கணக்கு விவர பட்டியல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை**

G MANIKANDARAJA
Digitally signed by G MANIKANDARAJA
Date: 2023.04.29 11:03:30 +0530

நான்காவது கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.